# இயல் : நான்கு

## ஸ்ரீ நாராயண குரு தத்துவங்கள்

### 4.1. ஒரு சாதி

ஸ்ரீ நாராயண குரு மனிதனுக்கு ஒரு சாதி மட்டுமே உள்ளது என்கிறார். பல தரப்பட்ட ஜனங்களிடையே தொடர்ந்து வருவதும், மற்றவைகளிலிருந்து வேறுபடுத்தி அறிய உதவும் இலட்சணமே சாதியாகும். பசுக்களை அவற்றின் தன்மை கொண்டு வேறுபடுத்துகிறோம் அதே போல் மனிதனை மனிதத் தன்மை கொண்டே வேறுபடுத்த முடியும்.

பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திர என்பவை உண்மையில் சாதிகள் அல்ல. மனிதத் தன்மை மட்டுமே அவர்களுடைய உண்மையான சாதி.

ஆணும் பெண்ணும் அன்பால் இணைந்து அந்த உறவில் சந்ததி உருவாகுமானால் அவருடைய சாதி ஒன்று என்று கூறலாம். அவ்வாறில்லாமல் அதனை இரண்டு என்று கூறுவது அறியாமையினால் ஏற்படும் மன வேறுபாடாகும்.

வேறுபட்ட சாதிகளில் உள்ள மனிதன், பசு, சிங்கம், மான் ஆகியவை அவைகளின் உடல், தோற்றம், குரல், மணம், உணர்வு போன்றவற்றால் மாறுபட்டே காணப்படும், ஒன்றின் சரீரமே அதன் சாதியை காட்டுகிறது. அதனால் காட்சியை காணக் கூடிய கண்ணும், பகுத்தறியும் தன்மையும் உடையவன் மற்றவரைக் கண்டால் அவர் எந்த சாதி என்று கேட்கமாட்டான்.

ஒருவனுடைய தொழில், மொழி, தேசம் என்பவற்றை அடிப்படையாக வைத்துக் கொண்டு நிர்ணயிக்கப்படும் பெயர் அவருடைய சாதி என்று கூறுபவர்கள் அறிவற்றவர்கள். அறிவுடைய எவரும் அவ்வாறு ஒருபோதும் கூறுவதில்லை.

ஞானம் என்ற கடலில் இருந்தே நாம் காணுகின்ற அனைத்தும் உருவாகியுள்ளது. மனிதரில் மனிதத் தன்மையும், பசுவில் கோத்வமும், குரங்குகளின் வானரத்துவமும், குயிலின் பிகத்துவமும் அதன் சாதியைக் குறிக்கிறது. ஆகையினால் உலகத்திலுள்ள மனிதர்கள் அனைவரும் ஒரே சாதியைக் கொண்டவர்களே ஆவர். தோற்றம், மொழி, தேசம் என்ற பேதங்களால் சாதி என்ற மாற்றம் உருவாவதில்லை.

எல்லா மனிதர்களுடைய சாதியும் ஒன்று என்பதால், போட்டி பொறாமையை ஒழித்து அன்பு, சகோதரத்துவம், ஒற்றுமையோடு எல்லோரும் வாழவேண்டும் என்று 'ஸ்ரீ நாராயண தர்மத்தில்'[1] இருந்து அறியமுடிகிறது.

இராமலிங்க அடிகளாரும் தம் திருவருட்பா பாடலில் சாதி, மத, சமயநெறிகள் சாத்திரங்களை மிக கடுமையாக எதிர்கிறார்.

"சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே
ஆதியிலே அபமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்அழ கலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே நிறுத்த
நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தல் அவர் தாமே
வீதியிலே அருட்சோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணம்இது கூவுகின்றேன் உமையே"[2] என்கிறார்.

"சாதி அமைப்பு போலித்தனமானது; ஒரே கடவுள் தான் எல்லா மனிதர்களையும் காப்பாற்றுகின்றார்.
பிறந்த சாதிக்கு என்ன சக்தி இருகின்றது? விஷத்தை ருசித்தவன் எந்த சாதியினன் ஆயினும் சாவதைத் தவிர்க்க முடியுமா?....
இன்றிலிருந்து எவருமே சாதியினால் வேறுபடுத்தப்பட மாட்டார்!

கடவுள் ஜாதியைக் கேட்கமாட்டார், உண்மை வாழ்க்கை வழியைத் தெரிந்து கொள், ஏனெனில் ஒருவனின் செயல்களே அவனது விலையை நிர்ணயிக்கும்"[3]

என்ற குரு நானக்கின் வரிகள் சாதி ஏற்பாட்டை போலித்தனமானது என்கிறது.

ஸ்ரீ நாராயண குரு கூற்றுபடி,

சாதி இல்லை, சாதி இருகின்றது என்ற எண்ணம் மனிதனிடமிருந்து மாற வேண்டும். சாதியைக் குறிப்பிடும் பெயர்களைப் பயன்படுத்தவே கூடாது. அதை தவிர நல்ல பெயர்கள் ஏராளம் உண்டல்லவா என்கிறார்.[4]

ஸ்ரீ நாராயண குரு மனிதனின் பேருக்குப் பின்னால் சாதியைப் பயன்படுத்தக் கூடாது. சாதி என்பது மனிதனின் செயல்பாடுகளில் காண முடியாது, அவனது வளர்ச்சியில் காண முடியாது. அப்படிப்பட்ட சாதிக்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மனிதனுக்குத் தேவை நிம்மதியான வாழ்க்கை, அன்பால் நிம்மதியைப் பெறமுடியும். சாதியால் பெற முடியுமா? எந்தச் சாதி என்று கேட்பது முட்டாள்களின் முடிவாகும். குருடர்கள் தான் சாதியைக் கேட்பார்கள். சாதிப் பெயரைக் கேட்டு சாதிக்கப்போகும் செயல்தான் என்ன என்று நினைத்தால் எதுவுமிருக்காது என்கிறார்.

குரு நாம் காணும் இந்த பிரபஞ்சம் , ஆத்மாவினால் தன்னைத் தானே ஒளிமயமாக்குவதாகும். அதனால் ஒதுக்கப்பட்டவர்கள் என்றோ, ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள் என்றோ இல்லை என்கிறார்.[5]

மேலும் குரு மனிதன் செய்யும் அனைத்து செயல்பாடுகளிலும் தர்மம், அதர்மம் அடங்கியுள்ளது, அகிம்சை வழியில் செல்லும் மனிதன் ஆறுதல், கருணை, தீமை செய்யாமை ஆகிய நற்குணங்களுக்கு இலக்கணமாகத் திகழ வேண்டும். நாம் செய்யும் கருமங்கள் தான் நமது ஆத்மாவிற்கு நட்பு, பகைமை ஏற்படுத்துகிறது. கர்மம் புரியாமல் நாம் இவ்வுலகில் வாழ்வது சிரமமாகும். எனவே நாம் கடமையைச் செய்யும் பொழுது நல்லது,

கெட்டது எனக் கூர்ந்து கவனித்துச் செய்ய வேண்டும். எனவே நாம் செய்யும் உதவிகள் அனைத்தும் அன்பும், பரிவும் கொண்டதாக அமையவேண்டும் என்கிறார்.[6]

நாம் யாரைப் பார்த்தாலும் பார்வையில் சமநிலை ஏற்பட வேண்டும். அனைவரையும் சகோதரர்களாகவே பார்க்க வேண்டும். அனைவரும் சகோதரர் என்ற எண்ணத்தோடு பார்க்க வேண்டும். மற்றவர் செய்யும் செயலில் நமக்கு விரும்பாதது இருக்குமே யானால் அதற்காக நாமும் அதை செய்யக் கூடாது என்ற கருத்தை உணர்ந்தாக வேண்டும் என்கிறார்.[7]

மேற்குறித்த ஸ்ரீ நாராயண குருவின் வரிகள் மூலம் நாம் அறிய முடிவது ஒன்றிலிருந்து நாம் மற்றொன்றை வேறுபடுத்தி அறிய உதவுவது சாதி (Kind) ஆகும். அப்படிப் பார்க்கும் போது மனிதனை, விலங்கு மற்றும் மற்றவைகளிலிருந்து வேறுபடுத்திப் பார்க்க மனிதனின் மனிதத் தன்மையை வைத்து மனித சாதி என்ற ஒன்றைக் கொண்டு மட்டும் தான் வேறுபடுத்த முடியும். வேறுவகைகளில் மனிதனை சாதிகளாக பிரிக்க முடியாது என்கிறார் என்பதை அறிய முடிகிறது.

## 4.2. ஆன்மநேய ஒருமைப்பாடு

சமூக அமைப்பை அடையாளப்படுத்தும் போது நிலவுடமைச் சமூகம், அடிமைச் சமூகம், முதலாளித்துவ சமூகம் என மேலை நாடுகளை சமூக அமைப்பாக அடையாளப்படுத்துவது போல இந்தியச் சமூகத்தை அதன் பிரத்யேகப் பண்புகளைக் கொண்டு அடையாளப்படுத்துவதற்குச் சாதிச் சமூகம் என்ற கருத்தாக்கம் நமக்குப் பயன்படுகிறது எனலாம்.[8]

குறிப்பாக இந்து மதத்தைப் பற்றிப் பார்க்கும் போது சமூகரீதியில் இந்து மதத்திற்கென்று ஒரு தனியம்சம் இருகின்றது. இந்து மதத்தில் மட்டும் அடிப்படையாக வர்ணாசரம தர்மம் பிரத்யேகமாக இருக்கின்றது. பல வகுப்பாக சமுதாயத்தை வர்ணதர்மத்தில் பிரித்து வைத்திருகின்ற இந்து மதம் மட்டும் இன்றும் நிலைத்து நிற்கின்றது

அது பிறப்பின் அடிப்படையில் தொழிலைப் பாரம்பரியமாகக் கொண்டு வர்ணதர்மம் ஏற்படுத்தப்பட்டது.

உபநிடதங்களில் தலையிலிருந்து படைக்கப்பட்டவன் பிராமணன், தோளிலிருந்து படைக்கப்பட்டவன் சத்திரியன், தொடையிலிருந்து படைக்கப்பட்டவன் வைசியன், பாதத்திலிருந்து படைக்கப்பட்டவன் சூத்திரன் என்கிறது.[9]

பிராமணர் மற்றும் சத்திரியர்கள் ஆளப் பிறந்தவர்கள், வைசியர்கள் மற்றும் சூத்திரர்கள் உற்பத்தியில் ஈடுபடப் பிறந்தவர்கள், என்றும் சூத்திரர் என்று அழைக்கப்படும் பகுதியினர் மேலே உள்ள மூன்று வர்ணத்தாருக்கும் அடிமையாக வாழவே ஆண்டவனால் படைக்கப்பட்டவர்கள் என்று வலுவான "தர்மசாஸ்திரம்"[10] உருவாக்கப்பட்டது. ஆனால் இத்தகைய ஏற்றத் தாழ்வை ஸ்ரீ நாராயண குரு அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

அனைவரும் ஆத்ம சகோதரர்கள் என்றே கூற வேண்டும் இதனை நாம் நினைவில் கொள்ள வேண்டும் என்கிறார்.[11]

இவ்வுலகில் அனைத்தும் ஒரு சக்தியால் இணைக்கப்பட்டுள்ளது உண்மையெனில் 'ஒரே சக்தி' எனும் உண்மைப் பொருளில் உயர்ந்தவன், தாழ்ந்தவன் எனும் இருபிரிவு எவ்வாறு காணப்படும் என்கிறார்.[12]

ஸ்ரீ நாராயண குருவின் ஆன்மநேய ஒருமைப்பாட்டுக் கருத்தாக கூறுவது,

"ஒரு சாதி ஒரு மதம் ஒரு கடவுள் மனிதனுக்கு
ஒரு கரு ஒரு ரூபம் வேற்றுமையில்லை அதில்"[13] என்பதாகும்.

**இந்த ஒரு கருவில் இருந்து நாம் உட்பட இந்த உலகம் முழுவதும் தோன்றியது என்பதன் மூலம் அனைவரும் ஆத்ம சகோதர்கள் என்கிறார். ஸ்ரீ நாராயண குரு கூறும் ஒரு கருவைக் கண்டடைதல் வேண்டும்.**

**நவீன பௌதீக சாஸ்திரம் (விஞ்ஞானம்) ஒரு பெரிய வெடிப்புச் சிதறல் ஏற்பட்டு. அது விரிவடைந்து உண்டானதே இவ்வுலகம் என்று சொல்கிறது. இனியும் ஒருமுறை இது போன்ற வெடிப்புச் சிதறல் அதாவது வெடிப்புச் சிதறல் போல் உட்புறம் சுருங்குவதன் மூலம் உலகம் இல்லாமலும் போய்விடும் . இதை " பிக்பாங் (**Big Bang**), பிக் க்ரன்ச் (**Big Crunch**) " விதியின் கூற்றுப்படி ஆனால் எப்பொருள் வெடித்துச் சிதறியது என்றோ எதனுள் சுருங்குமென்றோ கூறவில்லை.**[14]

**சமணத்தின் அடிப்படைத் தத்துவம் உலகம் பொருள்களால் ஆனது என்பதே, நிலம், நீர், காற்று, நெருப்பு எனும் நான்கு பூதங்களைக் கொண்டதே பொருள்கள் என்றும், அனைத்துப் பொருள்களிலும் இந்த நான்கு பூதங்களின் தன்மை கொண்ட அணுக்கள் உள்ளன என்றும் கூறுகிறது.**[15]

**வைசேஷிக தத்துவம் கோடிக் கணக்கான அணுக்கள் இருகின்றன. இவை ஒவ்வொன்றுக்கும் ஒரு குணம் உள்ளது என்கிறது, இதனை விசேஷ் – அதாவது சிறப்பு குணம் என்றழைக்கிறது.**[16]

**டெமாக்ரிட்டஸ் சகல பொருள்களுக்கும் அடிப்படையாக அமைவது அணுக்கள் என்கின்றார்.**[17]

**சமணம், வைசேஷிக தத்துவம், டெமாக்ரிட்டஸ் கூற்றுப்படி சகலவற்றிற்கும் முதன்மையாக அமைவது அணுக்கள் ஆகும். ஆனால் அணுக்களைப் பிளக்க முடியும். இதனால் பொருள் மறைகின்றது, ஆற்றல் மட்டுமே மிஞ்சுகின்றது என்பதை அறிய முடிகின்றது. அறிவு அணுக்களின் உள்ளமைந்த பண்பாக உள்ளது.**

ஸ்ரீ நாராயண குருவின் கருத்துப்படி எல்லாவகை ஆற்றல்களுக்கும் முதன்மையாக, அடிப்படையாக அமைவது அறிவு (Knowledge) என்பது ஆகும். இதையே அவர் அனைத்திற்கும் முதல் கருவாக கொண்டார் என்பதை அவர் ஆத்மோபதேச பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது.

"ஆற்றல்கள் பல அறிவிற் குண்டவற்றை எல்லாம்
அணி வகுத்தால் வேற்றுமையும் ஒற்றுமையும் ஆகும்
வேற்றுமையாம் சக்திகளை ஒன்றுபடுத்தி
வீறுடனே ஞானத்தை விளங்கிடவே செய்க!" [18] என்கிறார்.

"வேற்றுமையும் ஒற்றுமையும் சிறப்பு, பொது என்று
மேலுமிரு வகையாக இயக்கமுறும் என்ப
வேற்றுமையின் சிறப்பென்றும் இணையாத பண்பை
விளம்பும் ஒற்றுமைச் சிறப்போ பிரிவற்ற ஒன்று"

"ஒற்றுமையும் வேற்றுமையும் சிறப்பு பொது என்ற
சக்தியாகவும் ஒழிவின்றித் தொடர்ந்து பல
உருவங்களை நல்கும் ஒற்றுமை வேற்றுமை
சக்தி வழங்கும் ஞானத்தால் உலகமிது பிரம்ம கலையால்
விளக்கம் எய்தும்!"

"அறிவென்ற சொல் விசேடமெனச் சொல்வார்
மதியாலே தீங்ககற்றி நல்லகதி வரவே
சமநெறியில் கருத்தூன்ற வேண்டும்"[19] என்கிறார்.

ஸ்ரீ நாராயண குருவின் கருத்துப்படி ஒரே அறிவு தான் ஒற்றுமை, வேற்றுமை என்று தன்னை பிளவுபடுத்தி உலகமாகவும்,எல்லா பொருளுக்கும் அடிப்படையாகவும் அமைகிறது.

அனைத்தையும் அறிவுமயமாய் பார்ப்பதனால் அனைவரும் சமம் என்பதை அறிய முடியும் என்கிறார்.

ஜெர்மானிய தத்துவ அறிஞர் ஹெகல் கூற்றுப்படி, பூரணக் கருத்து தன்னைத் தானே பிளவுபடுத்தி, பிறிதொன்றாகத் தன்னைப் புறவயப்படுத்தி, அந்தப் பிறிதொன்றும் முரண்பட்டு, போராடி பிரக்ஞை பெறுகின்றது. இவ்வாறு முழுமை பெறுதலே பூரணக் கருத்தின் வரலாறு, இயக்கம், நிகழ்வு. பூரணக் கருத்து முதலில் தன்னைச் சடப் பொருளாகவும் (பௌதீக, இரசாயண உலகம்), பின்னர் உயிரினங்களாகவும் (தாவர, விலங்கு உலகம்). அதற்கு பின்னர் மனித வாழ்வாகவும் (மனம், வரலாறு) புறவயப்படுத்திக் கொள்கின்றது. சட உடலும், உயிரினங்களும் வரலாறும் இவ்வகைச் சிந்தனையில் பூரணக்கருத்தின் இன்னொரு வடிவமே. சடப்பொருள் என்பது சிறிதும் பிரக்ஞை அற்ற பொருள் எனில் தாவரமும் விலங்கும் மனித உணர்ச்சிகளும் படிப்படியாகத் தன்னுணர்வு பெறும் கருத்தின் வெளிப்பாடுகளாகும். சடப்பொருளையும் கூட இயற்கை விதிகள் ஆளுகின்றன. அதாவது சடப்பொருளுக்குள்ளும் அறிவார்த்த ஒழுங்கு உண்டு. இது சடப்பொருளுக்குள் கருத்தமைப்பு உள்ளது என்பதன் நிரூபணம்.

இயற்கையின் ஒழுங்கு அதனுள் தூங்கிக் கொண்டிருக்கும் அறிவு. அது படிப்படியாக விழித்துக் கொண்டே உயிரினங்கள் பரிணமிக்கின்றன. இயற்கையின் வளர்ந்த ஓர் உயிர்ப்பு மனிதனின் தோற்றமாகும். அதன் பின் காட்டுமிராண்டியாக அவன் வாழ்ந்தது தொட்டு வரலாற்றில் அவன் மேலும் மேலும் அறிவு பெறுகிறான். இயற்கை குறித்தும் தன் வரலாறு குறித்தும் முழுப்பிரக்ஞை பெறுகிறான். இதுவே பூரணக் கருத்தின் இயக்கம் என்று கூறுவது குறிப்பிடத்தக்கது ஆகும்.[20]

ஸ்ரீ நாராயண குரு கூற்றுப்படி,

> "தோன்றுகின்ற பொருள் யாவும் உண்மையல்ல; அந்தத்
> தோற்றத்திற் காதாரம் அறிவென்று கொள்க" [21] என்கிறார்.

“அறிவு வடிவான பரமான்மா பூதங்கள் அனைத்தினையும்
ஊடுருவிச் செயல்புரியும் வேளை,
பொறி பறக்கும் தீப்பந்தம் சுழலுவதைப்
போன்று பூதங்கள் எய்திடும்பல மாயத்தோற்றம்” [22] என்கிறார்.

லெனின் கூற்றுப்படி, கருத்து புறஉலகை பிரதிபலிப்பது மட்டுமல்ல, அதை உண்டாக்கவும் செய்கிறது . கருத்து யதார்த்தமாக உருமாறுகிறது என்பது பற்றிய சிந்தனை மிகவும் ஆழமானது வரலாற்றுக்கு இது மிகவும் முக்கியமானது. இதை தனி மனிதனின் வாழ்க்கையிலும் கூடக் காண முடியும், இதில் ஏராளமான உண்மை உண்டு என்கிறார்.[23]

ஸ்ரீ நாராயண குரு கூற்றுப்படி,

“புறத்தினிலே காட்சி தந்தே அகத்துணர்வாய் நிற்கும்
பூத மைந்தும் பரம் பொருளில் வேறுபட்டதல்ல
கரையருகே பல அலைகள் காணப்பட்டாலும்
கடல் வேறு அலைவரிசை வேறோ?”[24] என்கிறார்.

“பொறி ஐந்தும் அகக்கரணம் தாங்குமுடல் மற்றும்
பூவுலகும் இயங்குகின்ற அண்டங்கள் யாவும்
அறிவொளியாய்ப் பல்கதிரைப் பரவெளியில் வீசும்
ஆதித்தன் வடிவமென்றே அறிந்து கொள்ள வேண்டும்” [25] என்கிறார்.

அருட்பெரும் ஜோதி அகவல் உரை விளக்கத்தில் சரவணானந்தா சுவாமிகள்,

“அகண்ட வான்வெளியாய் நிறையொளியாய் உலகம் யாவுமாய்
பொருள்கள் எல்லாமுமாய், உயிர்கள் எவையுமாய்

அவ்வுயிர்களில் சிறந்த மக்கள் யாவருமாய், மக்களின்
அருள் அறிவாய் விளங்கி, அந்த அருள்
அறிவால் மெய்யாக உணர்ந்து அடைந்து
அனுபவிக்கின்ற ஒன்றாக
அதுவே அருட்பெருஞ்ஜோதியாக விளங்குகிறது” [25] என்கிறார்.

இராமலிங்க அடிகள் தம் திருவருட்பா பாடலில்,

“ஒளிஒன்றே அண்டபகிர் அண்டம் எலாம் விளங்கி
ஓங்குகின்ற தன்றிஅண்ட பகிர்அண்டங் களிலும்
வெளிநின்ற சராசரத்தும் அகத்தினோடு புறத்தும்
விளம்பும் அகப்புறத்தினோடு புறப்புறத்தும் நிறைந்தே
உளிநின்ற இருள்நீக்கி இலங்குகின்ற தன்மை
உலகறியும் நீஅறியா தன்று கண்டாய் தோழி
தளிநின்ற ஒளிமயமே வேறிலைஎல் லாமும்
தான் எனவே தாகமங்கள் சாற்றுதல் சத்தியமே” [27] என்கிறார்.

“.... அருள் ஒளியால் சிவமயமே எல்லாம்
தாம் எனவே உணர்வது சன்மார்க்க நெறி பிடியே” [28]

“.... அன்பெனும் உயிர் ஒளிர் அறிவே...” [29]

என்பதன் மூலம் ஒளியே அனைத்துமாக விளங்குகின்றது என்றும் அத்தகைய ஒளி அறிவுமயமானது என்கிறார் இராமலிங்க அடிகளார்.

ஸ்ரீ நாராயண குருவும் அறிவை ஒளி என்கிறார்,

"ஆதியும் அந்தமும் இன்றி ஒரு அடிமுடியும் இன்றி
அருட்சுடராய் ஒளிவீசும் துரிய ஞானம்" [30]
"... அறிவென்று கூறுவது பேரொளியே எண்ணில்
அறிவும் அறிகின்றவனும் ஓர் பொருளே ஆகும்"[31] என்கிறார்.

அறிவு வேறு அறிபவன் வேறு என்றுரைத்தல் உண்மையை அறியாதவர் கூற்று ஆகும். அறிவொளியும் அறிபவனும் அன்னியம் அல்ல ஒன்றே ஆவர்"[32] என்கிறார்.

"வெளிப் பொருள்கள் ஒவ்வொன்றும் ஐம்பொறித்
தொடர்போல வெவ்வேறாய்த் தோன்றிடுதல் அவித்தையதன்
செய்கை வெளிப் பொருள்கள் அறிவொளியில் வெறும் பெயராய்
மாறி வேற்றுமைகள் நீங்கிப்பின் அறிவுமயமாகும்" [33] என்கிறார்.

அறிவு வடிவாயுள்ளோம் நாம் என்னும் உண்மை அறியாமை என்கின்ற திரையால் மறைக்கப்படுகிறது என்கிறார்.[34] அது நீங்கும் போது அனைவரும் சமம் என்பது புரியும் என்கிறார்.

திகார்த், நான் சிந்திக்கிறேன் எனவே நான் இருக்கிறேன் (Cogito ergo sum, "I think, Hence I am") என்கிறார். மனிதன் சிந்திக்கிறான், மனிதன் சிந்தனை மயமானவன், சிந்தனையின் மூலமாகவோ, சிந்தனையைச் சார்ந்தே மற்ற எல்லாம் நியாயம் பெறுகின்றது. சிந்தனையின் மூலமே தெளிவு ஊட்டப்படுகின்றது. தனக்குத் தானே உண்மையாகத் தெரியும் ஒன்றைத் தான் அறிவின் அடிப்படையாக கொள்ள வேண்டும். புலனுணர்வை விட உறுதியான அடிப்படையைக் கொண்டது அறிவு. பொருளின் இருப்பு, மனித இருப்பு, உலகின் இருப்பு ஆகியவை அறிவின் ஊடகத்தால் நியாயம் பெறுகையில்

அறிவு எதனையும் சாராமல் சுய இருப்பு கொண்டதாக தெளிவான அடிப்படை உண்மையாக இருகிறது.[35]

உலகம் முழுவதையும் இணைத்து செயல்பட வைத்துக் கொண்டிருக்கும் ஒரே சக்தி அறிவு. எல்லா உயிர்களுக்கும் உள்ளேயும் ஒளிரும் அந்த 'ஒரே அறிவை' அவன் இவன் என்று பிரிவினையால் துன்பத்தில் வருந்துகின்றோம். கயிறுத் துண்டைக் கயிறாகக் காணவில்லை என்பது மட்டுமல்ல பாம்பாகக் காணவும் செய்தோம். பாம்பு உண்மையில் நம் மனதில் இருந்தது. மனதில் இருந்த பாம்பை உண்மையில் இருந்த கயிறுத்துண்டில் இணைத்துப் பார்த்தோம். இப்படி மனதில் உள்ள அசத்தியத்தை சத்தியத்தின் மீது ஏற்றி அதை சத்தியம் என்று நினைக்க கூடாது.உண்மையை உணரும்போது சத்தியம் அறியப்படும்.

வேதாந்த சாஸ்திரம் த்ருச்யம் = காட்சி, த்ருக் = காண்கிறவன். தர்சணம் = காணல் இம்மூன்றும் ஒரே அறிவாக 'த்ரிபுடி' என்று குறிப்பிடப்படுகிறது.[36]

பேராசிரியர் நிசாமி அவர்கள், பிரபஞ்ச ஒருமை குறித்த கோட்பாடு சமூக வாழ்வை அதன் பன்முகப் பிளவுகளிலிருந்து ஒரே சீரான தன்மைக்கு இட்டுச் செல்வது. குழப்பத்தில் இருந்து ஒழுங்குக்கு இட்டுச் செல்வது, வேற்றுமையில் இருந்து ஒற்றுமைக் இட்டுச் செல்வது என்று குறிபிடுகிறார்.[37]

சகலமும் சர்வாம்சமாக உறவு கொண்டவை என்கிறார் புத்தர். தீ நீர் வான் மண் பிறவும் மாய பெருமானே கறந்த பாலுள் நெய்யே போல் இவற்றுள் எங்கும் காண்டுகொள் என்கிறார் நம்மாழ்வார்.[38]

"இகநிலைப் பொருளாய் பரநிலைப் பொருளாய்
அகமறப் பொருந்திய அருட்பெரும் ஜோதி" [39]

என்கிறார் இராமலிங்க அடிகள்.

பாரதியாரும்,

"சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"[40]

"காக்கை குருவி யெங்கள் ஜாதி – நீள்
கடலும் மலையு மெங்கள் கூட்டம்
நோக்கு திசையெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்க களியாட்டம்" [41] என்கிறார்.

"செத்தபிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திட லாமென்று எண்ணியிருப்பார்
பித்த மனிதராவர் சொல்லுஞ் சாத்திரம்
பேயுரை யாமென்றிங் கூதேடா சங்கம்
இத்தரை மீதினிலேயிந்த நாளினில்
இப்பொழு தேமுத்தி சேர்ந்திட நாடிச்
சுத்த அறிவு நிறையிற் களிப்பவர்
தூய வராமென்றிங் கூதேடா சங்கம்" [42] என்கிறார்.

மேலும் பாரதியார் அனைத்தும் ஒரே அறிவின் வடிவம் என்பதை,

"ஆத்திசூடி யிளம்பிறை யணிந்து
மோனத் திருக்கு முழுவெண் மேனியான்
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை யெனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துண ராது
பலவகையாகப் பரவிடும் பரம்பொருள்

ஒன்றே அதனியல் ஒளியுறு மறிவாம்
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்;
அதனருள் வாழ்த்தி அமரவாழ் வெய்துவோம்" [43] என்கிறார்.

ஸ்ரீ நாராயண குரு கூற்றுப்படி மணற் கேணிக்குள் காற்றால் மண் விழும் போதுண்டாகும் வரிசையலை போலப் பொய் அனுபவங்கள் தாக்க அணையாமல் ஒளி வீசும் பரமான்மா கூட அனேக வித வடிவங்கள் பெற்றது போலத் தோன்றும் என்கிறார்.[44]

அறியவொண்ணா ஒரு பொருளிங்கவனியிலே இல்லை, அறியாமை என்கிற திரைமறைத்தால் அன்றி, அறிவு வடிவாயுள்ளோம் என்னும் உண்மையை அறிய வேண்டும் என்கிறார்.[45]

ஸ்பினோசா ' நிறைந்த கருத்துக்களை' (Adequate Ideas) பற்றிக் கூறும் போது இவை தெளிவானவை, சுய இருப்பு கொண்டவை, அதிக பட்ச மெய்மை கொண்டவை, உலகின் சாராம்சம் பற்றியவை, உள்ளுணர்வின் மூலம் நிறை கருத்துக்களை எட்டும் மனிதன் சர்வாம்ச முழுமையை உணர்கின்றான். சகலமும் சகலவற்றுடன் உறவு கொண்டவை, தன்னந்தனியானது என்று எதுவும் இல்லை என்பவற்றை உணர்கிறான் என்கிறார்.

ஸ்பினோசா ' உலகின் உள்ளமைப்பு அறிவுப்பூர்வமானது ' (A thinking substance) அறிவுப்பூர்வமான இருப்பு பொருளின் உள்ளமைந்த பண்பாக உள்ளது. அறிவு என்பது மனிதன் பண்பாக மட்டும் இல்லாமல் உலகின் ஒழுங்கு என்ற பொருளில் அது உலகின் முழுமையையும் சிந்தனையில் ஒழுங்கு என்ற பொருளில் அறிவின் முழுமையையும் குறிக்கிறது. இந்த இரண்டு ஒழுங்கும் பரஸ்பரம் ஒத்த தன்மை உடையவையாகும் என்று குறிப்பிடுகின்றார்.[46] "பொதுமை என்பது அறிவின் பண்பு" என்கிறார் தாமஸ் ஹோப்ஸ்.[47]

ஸ்ரீ நாராயண குரு கூற்றுப்படி,

"பொறி கரணம் அளக்க வொண்ணா அறிவொன்றாம் மற்றும்
பொறிகளுக்குப் புலனாகும் அறிவொன்றாம் – இந்த
இருவகையிலும் சேராத பொருள் எங்கும் இல்லை
எந்த நினைவிலும் கனவிலும் இல்லை" [48] என்கிறார்.
"இரை முதலாம் நுகர் பொருட்கள் வந்து வந்து போகும்
ஒரு பொருளே நிலைக்கும் அது தூய அறிவாகும்
ஒளிரும் அறிவது நாமே" [49] என்கிறார்.

இராமலிங்க அடிகளார் திருவருட்பா பாடலில்,

"சாதி சமயச் சழக்கெலாம் அற்றது
சன்மார்க்க ஞான சபைநிலை பெற்றது" [50]

ஞானசபை என்று ஞானத்தின் முக்கியதுவத்தை இராமலிங்க அடிகள் கூறுவது குறிப்பிடதக்கது ஆகும்.

ஸ்ரீ நாராயண குரு அனைத்தும் அறிவுமயமாக உள்ளது என்றும் ஞானமாகிய கடலில் இருந்து தான் மனிதன் உட்பட அனைத்தும் தோன்றியது இதில் உயர்வு, தாழ்வு என்று பாகுபாடு பார்பது முடியாது என்றும் கூறுகிறார். இது முக்கியமாக மனிதனைச் சமமாகப் பார்ப்பது ஆகும். அனைவரையும் ஆத்ம சகோதரர்களாக கொண்டது ஆகும்.

அருவக் கருத்துக்களை அடியோடு தடை செய்வது விஞ்ஞானங்கள் வளர்ச்சிக்கே தடையாகப் போய்விடலாம். அருவக் கருத்துக்களுக்கு இருப்பியல் (Ontological) அந்தஸ்து வழங்காமல் கருதுகோள்கள் போல தற்காலியமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பயன்பாடற்ற அருவக் கருத்துக்களைக் காலப் போக்கில் வெளியேற்றி விட வேண்டும்.[51]

இவ்வாறு ஒவ்வொரு தனிமனிதனும் அறிவின் வடிவமாக (ஞான தேகமாக) இருப்பதாக ஸ்ரீ நாராயண குரு அவர்கள் கூறுகிறார்.

இருட்டறையில் உள்ளவன் மற்றொருவனிடம் நீ யார்? என்று கேட்க மற்றொருவனும் நீ யாரோ? என்பான் இருவரது வினாக்களுக்கும் எழும் விடையோ ஒன்றே இருவரும் இயம்பிடுவார் 'நான்' என்று தானே![52]

"நான் நான் என்று பல காலத்தும் இடத்தும் நவின்றிட்ட போதிலும் 'நான்' ஒன்றே ஆகும்" [53] என்று ஆன்மநேய ஒருமைப்பாடாக ஸ்ரீ நாராயண குருவின் பாடல்வரிகள் மூலம் அறிய முடிகிறது.

ஸ்ரீ நாராயண குரு மேற்கண்ட கூற்றுப்படி அனைவரும் தன்னைத் தானே அறிவின் மூலம் இத்தகைய ஆன்மநேய ஒருமைப்பாட்டை உணர்ந்து அனைவரையும் ஆத்ம சகோதரர்களாகக் கொள்ள வேண்டும் என்பதை அறிய முடிகிறது.

ஸ்ரீ நாராயண குருவின் கருத்துப்படி அறிவு யதார்தத்தை பிரதிபலிக்கிறது மற்றும் உண்டாக்கவும் செய்கிறது. மனிதன் உட்பட அனைத்தும் அந்த ஞானத்தின் வெளிப்பாடு தான் எனவே மனிதர்களிடம் எந்த சாதி பிரிவினைகள், வேறுபாடுகள் இல்லாமல் அனைவரும் ஆத்ம சகோதரர் என்பதனை வழியுறுத்துகிறார்.

## 4.2. ஒரு மதம்

சமய விமர்சனமே சமூக விமர்சனத்தின் முன் நிபந்தனை என்கிறார் காரல்மார்க்ஸ். ஸ்ரீ நாராயண குருவின் 'ஒரு மதம்' என்ற கருத்து வர்க்க நலன்களை சுமந்தது ஆகும்.

**ஸ்ரீ நாராயண குரு தமது மத நிரூபணத்தில்,[54]**

**தத்துவ ஞானிகளின் மகான்களின் கருத்துக்களே மதமாகும். ஆனால் அவற்றை எடுத்துரைக்கும்போது ஏற்படுகின்ற வார்த்தை வேறுபாடுகளினால் மதங்களும் மாறுபட்டதாகத் தோற்றமளிக்கின்றன. எவ்வாறெனில் பல்வேறு மலைகளில் உற்பத்தியாகும் நதிகள் கடைசியில் ஒரே கடலில் சென்று கலப்பது போல மதங்களின் மார்க்கங்களும் சத்தியமான, எங்கும் நிறைந்த, என்றும் நிலைத்திருகின்ற பிரம்மத்தையே அடையச் செய்கின்றன. மதத்தை ஏற்படுத்திய ஆச்சாரியர்கள் பல கால கட்டங்களில் பிறந்து வளர்ந்ததனால், அவர்களுடைய ஞானத்திலும் மொழியிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இது அவர்கள் தோற்றுவித்த மார்க்கங்களும், மதங்களும் வெவ்வேறு என்ற தோற்றத்தைத் தருகின்றது. மத ஆச்சாரியர்களுடைய இலட்சியமும், உபதேசமும் ஒன்றே என்பதால் மதமும் ஒன்றே என்று கூறலாம்.**

**முஸ்லீம்கள், கிருஸ்துவர்கள், ஜைனர்கள், பௌத்தர்கள் மற்றும் பிற மற்ற மதங்களைச் சார்ந்தவர்கள், எப்போதும் தங்கள் வழியையே மற்றவர்களும் பின்பற்ற வேண்டும் என்று பாடுபட்டு கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மதத்தைச் சார்ந்தவர்களும் உலகின் எல்லா மதங்களும் தங்கள் மதங்களையே பின்பற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் மதம் ஒன்றே என்பதைக் குறித்து எவருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. எல்லா மதங்களும் ஒன்றாகவே சேர வேண்டும் என்ற நிலைப்பாடு கொண்டுள்ளதால் எல்லா மதமும் ஒரு மதமாகவே ஒரு நிலைப்படுகிறது.**

**மதம் பலவல்ல ஆனால் எல்லா மதங்களின் சிந்தாந்தமும், தத்துவமும் ஒன்றே என்று புரியாமல் யானையைப் பார்க்கச் சென்ற குருடர்களைப் போல சிலர் அறியாமையால் விதண்டாவாதங்களில் ஈடுபடுகின்றார்கள். மதங்களை வாதங்களின் மூலமோ பலத்தின் மூலமோ வெற்றி பெற முடியாது. அந்நிய மதங்களை குறை கூறுபவர்கள் வீண்வாதங்களில் ஈடுபட்டு அவர்களும் கெடுகின்றார்கள்.**

ஆத்ம சுகத்தைப் பெறுவதற்கே எல்லோரும் பாடுபடுகிறார்கள். அதற்கு ஊக்கமளிப்பது மதமாகும். ஒரே இலட்சியத்தை குறி கொண்டு செல்வதால் எல்லா மதங்களும் ஒன்றே ஆகும். மோட்சம் அடைவது என்பதே மதத்தின் இலட்சியமாகும். ஆகையால் எல்லா மதங்களும் அந்த ஒரே இலட்சியத்தைக் கொண்டுள்ளதால் மதம் ஒன்றே ஆகும். பலவேறுபட்ட கருத்துக்கள் காணப்பட்ட மதங்கள் வெவ்வேறானவை என்ற எண்ணத்திற்கு எவ்வித முக்கியத்துவமும் இல்லை.

எல்லா சாதிகளும் ஒன்றே என்பதால் மதமும் ஒன்றே. மதம் வெவ்வேறானவை என்ற எண்ணம் அறியாமையால் ஏற்படுவதே ஆகும். எல்லா ஜாதி மனிதர்களும் இறுதியில் என்னையே அடைகின்றார்கள் என்ற பகவத்கீதையின் கருத்தும் ஒரு மதம் என்ற உண்மையை ஏற்றுக் கொள்கிறது.

எல்லா மதங்களைச் சார்ந்தவர்களும் அவரவர் மதம் சொல்லுகின்ற, பொதுவாகக் காணப்படும் இலட்சியத்தை அடைய முயற்சிப்பதால் அனைத்து மதமும் ஒன்றே என்ற உண்மை தெளிவாகிறது என்கிறார் ஸ்ரீ நாராயண குரு.

இவ்வாறு ஒரு மதத்தையே ஸ்ரீ நாராயண குரு வழியுறுத்துவது பல்சமயச் சூழலில் மதங்களிடையே ஏற்பட்டுள்ள காழ்புணர்ச்சியைப் போக்கி எம்மதமும் சம்மத நிலையில் ஒரே மதமாக உணர முடியும்.

சமயம் வெறும் வார்த்தைகளில் இல்லை. எவனொருவன் சகலரையும் சமமாகப் பாவிக்கிறானோ அவனே சமய உணர்வுள்ளவன். உருவமற்ற ஒரே கடவுளின் மீது பக்தி,மனித நேயம் ஆகியவற்றின் அவசியத்தையும் இவைதவிர தனித்தனி சமயப் போக்குகள்,அவற்றின் புறச்சடங்குகள், சம்பிரதாயங்கள் ஆகியவை மனிதகுல ஒற்றுமைக்குவழிகாட்டாது . உலக அழுக்குகளுக்குள் சுத்தமாக வாழ்பவன் சமய உணர்வுள்ளோனென்று குருநானக் கூறுவது குறிப்பிடத்தக்கது.[55]

ஸ்ரீ நாராயண குருவின் கூற்றுப்படி,

"பல மதங்கள் பகர் வேதசாரமொன்றே என்று
அறியாமல் யானையை கண்ட குருடர்களைப் போல உலகில்
பலவிதமாய் சொல்லுகின்றவர் கூற்றில்
பலியாகமல் உண்மையிலே நிலைத்து இருக்க வேண்டும்" [56] என்கிறார்.

"ஒரு மதத்தை மட்டும் விரும்புகிறவன் பிற மதத்தை வெறுப்பான்
உயர்வான கருத்தினையும் பழிப்பான் பல்சமயக்
கருத்தொன்றே என்பதனைக் கண்டுணரும் வரைக்கும்
கலகமிது தொடர்ந்து வரும் மனக்குழப்பமாகும்" என்கிறார்.

"சண்டையிட்டு ஒரு மதத்தை வெற்றி கொள்ள முடியாது,
அதனால் குழப்பம் தான்வரும், பிற மதத்தைப் பகையாய்க்
கருதுபவர் உணராமல் காலமெல்லாம் வீணே
கலகமிட்டுக் கழிக்கின்றனர் இவர்கள் மதி தவறு" [57] என்கிறார் ஸ்ரீநாராயணகுரு.

"ஒரு மதமாய் உலகெங்கும் ஆக்கிடுவோம் என்போர்
உரைகின்ற மறுப்புரைகள் பிளவே உண்டாக்கும்
பிற மதங்கள் தமைப் பழியார் சமயங்கள் யாவும்
பேசுகின்ற உண்மைஒன்றென்று உணர்ந்து கொண்ட நல்லோர்" [58] என்கிறார்.

"உடம்பினிலே உறைகின்ற அவயவமில்லா ஆன்மா
உறுப்புகளைத் தனதென்றுகூறுவதும் அன்றி
உடம்பினுக்கப்பால் உள்ளதும் தனதென்னும் கூற்றில்
உணர்ந்திடுவீர்ஆன்மாவின் எல்லையற்ற விரிவை" [59] என்கிறார்.

பல்சமய சூழ்நிலையில் நபிகள் நாயகம் கூற்றுப்படி, புனித நூல்களைக் கொண்ட மக்களிடம் மரியாதையாக நடந்து கொள்ளுங்கள், ஒப்பந்தங்களில் ஈடுபடுங்கள், அவர்களுடைய வழிபாட்டுத் தலங்களில் தலையிடாதீர்கள், அவர்களுடைய மத உரிமைகளை மதியுங்கள், அவர்களுடைய மார்க்கம் அவர்களுக்கு, உங்களுடைய மார்க்கம் உங்களுக்கு என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.[60]

பல்சமய சூழ்நிலையில் தான் பின்பற்றும் மதம் மட்டுமே உண்மையென்று கொள்ளாமல் பிற மதங்கள் கூறுவதும் அதே உண்மையைத் தான் என்பதை உணர வேண்டும். 'ஆன்மாவின் விரிவு' எனும்போது அனைத்தும் சமம் என்பதை உணர்த்துவதே மதத்தின் இலட்சியம் என்பதை உணர வேண்டும் என்பதே ஸ்ரீ நாராயண குருவின் ஒரு மதம் ஆகும்.

சமயம் என்பது ஒருவன் உடுத்தும் ஆடைகளில் இல்லை, தலையை மழித்துக் கொள்வதிலோ, காதில் துவாரமிட்டு கடுக்கன் அணிந்து கொள்வதிலோ இல்லை, சமாதிகளை வழிபடுவதிலும், தியான ஆசனங்களிலும் சமய நம்பிக்கை உடனே வெளிப்பட்டு விடுவதில்லை. யாத்திரை செல்லுவதிலோ, தீர்த்தங்கள் ஆடுவதிலோ சமயம் இல்லை .இந்த உலகின் ஆசாபாசங்களினால் அலைக்கழிக்கப்படாமல் அவற்றால் பாதிக்கப்படாம ல்உறுதியாக வாழ்வதில் தான் எல்லாச் சமயங்களின் ரகசியமும் அடங்கியிருக்கிற து.ஒவ்வொரு மனிதனையும் தன்னைப் போல் நேசிப்பதில், தனக்கு சமமானவனா கக்கருதுவதில் சமயம் உள்ளது என்று சமயத்தைப் பற்றி குருநானக் கூறு வதுகுறிப்பிடத்தக்கது ஆகும்.[61]

இயற்கையில் நிறைந்திருக்கும் ஏக சத்தியமே அறிவு அப்பொழுது நானும் அந்த அறிவு தான். இந்த உண்மை உறுதியாவதே சத்கதி, இப்பொழுது சொல்லப்பட்ட ஒரே அறிவினைத் தான் பரமாத்மா, ஆத்மா, பிரம்மம், தெய்வம், ஈஸ்வரன், பகவான், சுவர்கத்திலிருக்கும் பிதா, ஏஹோவா, அல்லாஹ், தர்மம், எனப் பலவாறாக அழைக்கின்றனர். ஒவ்வொரு பெயரின் பொருள், இடம், மொழி எனுமிவற்றைப் பொறுத்து இருக்கும் இந்த சர்வ சாமானியப் பொருளுடன் நம்முடைய அபேதம் அல்லது சார்தலைக்

கண்டடைந்து வாழ்க்கையை மதிப்பும், அமைதியும் நிறைந்ததாக்குவதே எல்லா சமயங்களினுடைய சாரமாகும், இலட்சியம் ஆகும்.[62]

## 4.4. மதத்தின் உட்பொருள் மற்றும் இலட்சியம்

ஒருவருடைய மதத்தைப் பற்றி, ஒவ்வொருவருடைய கருத்தையும் தூய்மைப்டுத்துவதே இன்றைய மதத்தின் அவசியம் ஆகும். இத்தகைய தூய்மையாக்கல் பிற மதங்கள் அனைத்தையும் நேசிக்கவும் அவற்றின் தூய மனப்பான்மையினைக் கண்டறிந்து அவற்றை மதிக்கவும், மனிதனுடைய வாழ்க்கையை இன்புறச் செய்ய உதவுவதே மதத்தின் இலட்சியம் மற்றும் அவசியம் ஆகும்.

வாழ்க்கை என்பது மனிதன் சம்பந்தப்பட்டவரையில் ஒரு இலட்சியத்தை அடைவதற்கான முயற்சியாகும். அந்த இலட்சியம் 'ஆத்மசுகம்' என்பதாகும். ஆத்ம சுகத்தின் உயர்நிலையினையும் அதற்கான வழியையும் காண்பிப்பதே மதங்களின் தர்மம் ஆகும் என்கிறார் ஸ்ரீ நாராயண குரு.

"அனைவரும் ஆன்மாவின் சுகத்தினையே நாடி
அடைவதற்குப் பெறுமுயற்சி செய்கின்றனர்! மக்கள்
அனைவருமே ஒரு மதத்தைப் பொதுவாகக் கொண்டால்
ஆனந்த பெருநிலையை அடைந்திடுவார்கள்" [63] என்கிறார்.

ஸ்ரீ நாராயண குரு எல்லா மனிதர்களும் எப்போதும் முயற்சி செய்வது ஆத்ம சுகத்திற்காகவே என்பது தான் எல்லா மதங்களும் அந்த உயர்நிலையினை இலட்சியமாகக் கொண்டுள்ளன என்கிறார்.

பீர்ஸின் தத்துவத்தில் அமைதி என்பது ஓர் உளவியில் தேவை. புற உலகம் உண்மை என்ற கருத்து மேற்குறித்த சஞ்சலமற்ற மனதிற்குத் தேவையான ஒரு

நம்பிக்கையாகும். இறைவன் இருக்கிறான், அவன் பார்த்துக் கொள்வான், என்ற நம்பிக்கை அதே போல அமைதியை நாடும் மனதின் தேவை. பீர்ஸைப் பொருத்த மட்டில் இரண்டுமே இவற்றின் உண்மை, பொய்த் தன்மையால் அல்ல, அவற்றின் அமைதியைத் தரும் பயன்பாட்டால் உண்மை எனக் கொள்ளப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். [64]

> "அது பயனுள்ளது, ஏனெனில் அது உண்மை
> – அது உண்மை, ஏனெனில் அது பயனுள்ளது" [65] என்கிறார்.

வில்லியம் ஜேம்ஸ் என்பவர் உளவியல் ரீதியாக அந்தரங்கத்தில் நமக்கு பயன் விளைவிக்கும் அனுபவங்களே நமது உலக நோக்கை நிலைப்படுத்துவதில் தீவிரமான பாத்திரம் வகிக்கின்றது. அறிவை விட நம்பிக்கை மனித நடத்தையில் அதிக இடம் வகிக்கிறது. நம்பிக்கையின் கூறு பயன். அறிவு போதுமான அளவு நமக்குப் பயன் விளைவிக்காமல் போகும் போது. எது நமக்குப் பயன் விளைவிக்கிறதோ அதனை நாம் நம்புகிறோம். அது தான் மனித இயல்பு, சொந்த அனுபவங்களின் தேர்வில் நமது சொந்தப் பொறுப்பில் எதனையும் நாம் நம்பலாம், நம்புகிறோம். நம்பிக்கைக்குத் தான் செய்பாட்டுத் தன்மை உண்டு. அது நம்மை நமது நோக்கங்களை நிறைவேற்றுவதை நோக்கி இட்டுச் செல்கிறது. நம்பிக்கை செயல்பாட்டால் பயன்பாட்டால் அளக்கப்படுகிறது, எடை பார்க்கப்படுகிறது. கடவுள் இருகிறார் என்ற நம்பிக்கை மன அமைதியைத் தருகிறது எனவே அது பயன்பாடு உடையது என்கிறார். [66]

இராமலிங்க அடிகள் தமது ஜீவகாருண்யத்தில் இச்சை முதலியவற்றைப் பற்றி உண்டாகின்ற துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதில் வரும் இன்பம் அபரஇன்பம். பசியினால் வரும் துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதினால் வரும் இன்பம் பரஇன்பம் ஆகும் என்று சன்மாக்க இலட்சியமாக கூறுவது குறிப்பிடத்தக்கது ஆகும். [67]

"பூமியிலே கண்டமைந்த மதங்கள் கோடி!
புத்தமதம் சமணமதம் பார்ஸி மார்க்கம்
சாயியென யேசுமதம் போற்று மார்க்கம்
ஸநாதனமாம் ஹிந்து மதம் இஸ்லாம் யூதம்
நாமமுயர் சீனத்து தாவு மார்க்கம்
நல்ல கன்பூசி மதம் முதலாப் பார்மேல்
யாமறிந்த மதங்கள் பலவுளவா மன்றே
யாவினுக்கு முட்புதைந்த கருத்திங் கொன்றே"[68] என்கிறார் பாரதியார்.

நதிகள் பலவாக இருந்தாலும் ஒரே கடலைத்தான் சென்று அடைகிறது. எனவே மார்க்கம் பலவாக இருந்தாலும் இறைவனை சரணடைதல், இறைவன் அருகில் இருத்தல் மற்றும் இறைவனுடன் இரண்டரக் கலத்தல் போன்ற இறுதி இலட்சியத்தையே எல்லா மதங்களும் கொண்டுள்ளதால், மதத்தின் உட்பொருள் 'மோட்ஷம்' என்ற ஒன்று என்பதாலும் மதம் ஒன்று என்று கொள்ளப்படுகிறது.

ஸ்ரீ நாராயண குருவின் ஒரு மதம் பல்சமய சூழ்நிலையில் எல்லா மதங்களும் மனிதனின் 'ஆத்ம சுகம்' என்ற ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டதால் மதங்களின் உட்பொருள் மற்றும் இலட்சியம் ஒன்று என்பதால் மதங்களும் ஒன்று என்பதை உணர்ந்து கொள்ளமுடிகிறது. ஒவ்வொரு மதமும் தம் மதம் உயர்ந்தது மற்றொரு மதம் தாழ்ந்தது என்று நினைத்து சண்டையிட்டுக் கொள்ளாமல் மதங்களின் இலட்சியம் மற்றும் உட்பொருள் 'ஆத்ம சுகம்' ஒன்று தான் என்பதை உணர்ந்து மதங்களிடையே சகிப்புத் தன்மையை ஏற்படுத்துகிறது ஸ்ரீ நாராயாண குருவின் 'ஒரு மதம்' கொள்கை.

## 4.5. தீண்டாமை ஒழிப்பு

ஸ்ரீ நாராயண குருவின் காலத்தில் கேரளாவில் உயர்ந்த சாதி என்று கூறிக் கொண்ட சவர்ணர்கள் தாழ்ந்த சாதி எனப்பட்ட அவர்ணர்களை கோயிலுக்குள் அனுமதிக்காமல் உயர்ந்த சாதியினரைத் தொட்டால், பார்த்தால் தீட்டு என்று ஒதுக்கிய நிலையில்,

ஏன் இவர்களை இப்படி மன வேதனையடையச் செய்கின்றீர்கள், தீட்டு என்று சொல்லி இவர்களை ஒதுக்குவது சரியல்ல, அவர்களே சொத்துக்கள், சொத்துக்களை உருவாக்குபவர்களும் அவர்களே. அவர்கள் கடவுளை வணங்க தகுதியுடையவர்கள், அவர்களை கடவுள் பெயரால் இழிவுப்படுத்தி வீடாதீர்கள்.[69]

என்று கூறி, அருவிபுரத்தில் நெய்யாற்றங்கரையில் ஸ்ரீ நாராயண குரு மக்கள் ஏற்றத்தாழ்வு இல்லாமல் வழிபாடு நடத்த சிவலிங்க பிரதிஸ்டை செய்தார். [70]

தாழ்ந்த சாதியினர் கோயிலுக்குள்ளே அனுமதிக்கப்படாத நிலையில், பிராமணர்களுக்கு மட்டுமே கோயில் பிரதிஸ்டை செய்யும் உரிமை இருந்த நிலையில் ஸ்ரீ நாராயண குருவின் சிவலிங்க பிரதிஸ்டை தீண்டாமைக் கொள்கையை நீக்கி அனைவரும் சமமாக வழிபாடு செய்யவழி வகுத்தது குறிப்பிடத்தக்கது ஆகும்.

"சாதி பேதம் மததுவேசம்
ஏது மின்றி அனைவரும்
சகோதரராக வாழுகின்ற
வழிகாட்டி இடம் இது" [71]

என்று ஸ்ரீ நாராயாண குரு பிரதிஷ்டை செய்த அருவிபுரம் கோயிலில் ஒரு கல்லில் பச்சிலையால் எழுதி வைத்தார். மேலும் பல இடங்களில் ஸ்ரீ நாராயண குருவால் கோயில்

கட்டப்பட்டு தாழ்த்தப்பட்டவர்கள் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்டனர். இவ்வாறு ஸ்ரீநாராயணகுருவின் மதகொள்கை மூலமாக தீண்டாமை ஒழிக்கப்படுவதை அறியமுடிகிறது.

இராமலிங்க அடிகளும் சாதி மத பேதம் அற்ற சமரச சன்மார்க்கத்தை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது ஆகும்.

இராமலிங்கர் தமது திருவருட்பா பாடலில்,

"தங்கமே அனையார் கூடிய ஞான
சமரச சுத்தசன் மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவும் சங்கம்
சார்ந்திருக் கோயில்கண் டிடவும்
துங்கமே பெறுஞ்சற் சங்கம்நீ டூழி
துலங்கவும் சங்கத்தில் அடியேன்
அங்கமே குளிர நின்றனைப் பாடி
ஆடவும் இச்சைகாண் எந்தாய்"[72]

என்று சாதி, சமய வேறுபாடு இல்லாத நிலையை ஏற்படுத்தி வழிபாடு நடத்த சன்மார்க்க சங்கம் அமைத்த இராமலிங்க அடிகளார் கருத்து குறிப்பிடத்தக்கது ஆகும்.

"கங்கை நீரில் புனித நீர் ஆடுவதை விட விஷ்ணுவின் தொண்டர்கள் கால்பட்ட புழுதியில் ஆடுவது உயர்ந்தது" [73] என்கிறார் ஆண்டாள்.

இறைவன் அறிவொன்றும் இல்லாத ஆயர் குலத்தில் பிறந்தான் கோபியரோடு விளையாடினான் என்கிறார் தொண்டரடிப் பொடியாழ்வார்.[74] இவ்வாறு சமயங்களில் தீண்டாமை ஒழிக்கப்படுகிறது.

எமிலி டர்க்கெய்ம் என்பவர் கூற்றுப்படி, கூட்டுக் கேளிக்கைகள் சமய வாழ்வில் எதிர்பாராத திருப்பு முனைகளை ஏற்படுத்தும் படைப்புத் தன்மை கொண்டவை ஆகும். அம்மாதிரி சந்தர்பங்களில் தனி மனித அறிவுக்கு அகப்படாமல் புதையுண்டு கிடக்கும் ஆற்றல்கள் எழுச்சியுறுகின்றன. அவை படைப்புத் தன்மை கொண்டவை. வேறு எதனாலும் தீர்மானிக்க முடியாதவை, புரட்சிகரமானவை ரசாயன இணைவாக்கம் (Chemical Synthesis) போல் புதிய குறியீடுகளையும் கருத்தாக்கங்களையும் உண்டாக்கும் வல்லமை கொண்டவை. சமய வரலாற்றை இத்தகைய கூட்டு மனநிலை எழுச்சிகள் தாம் இயக்குகின்றன. இவை புனிதம் – புனிதமற்றது என்ற கறாரான எல்லைகளை உடைத் தெறியும் ஆற்றல் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.[75]

ஸ்ரீ நாராயண குருவின் மதக்கோட்பாடும், கோயில் பிரதிஸ்டைகளும் இந்தியச் சூழலில் குறிப்பாக சாதிய சூழலில் புனிதம் – புனிதமற்றது என்றும் தீட்டானது என்றும் ஒதுக்கப்பட்ட மக்களை அரவணைத்து அவர்களும் எல்லோரையும் போல ஆலயப் பிரவேசம் செய்யவும் கடவுளை வழிபடவும், எல்லோருக்கும் இணையாக அவர்கள் வாழத் தகுதியுடையவர்கள் என்பதை உணர்த்தவும், சகோதரத்துவத்தை ஏற்படுத்தவும் ஸ்ரீ நாராயண குருவின் மத கொள்கை பயன்படுகிறது.

## 4.6. அறக்கோட்பாடு

மனிதனது அறச் செயல்களும் அவனது ஆழ்ந்த அனுபவங்களும் மதக் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவையாகும். மதங்களைச் சீர்திருத்துவதும் மறுகட்டமைப்பு செய்வதும் அவசியம் ஆகும். மதங்களில் சமூக நீதி, மனித வாழ்வு, கடவுள், உலகம் போன்றவற்றை மறுபரிசீலனை செய்வது முக்கியமாகும். ஒவ்வொரு மதத்திலும் நற்கதி அடைய ஒரு வகையான அறத்தை (Ethics) பின்பற்றுகின்றனர். இது மனித இனத்தை செம்மைப்படுத்துகிறது. எனவே அறத்தின் அவசியமே மதத்தின் முக்கிய நோக்கம் ஆகும்.

"மெய்யறிவு பெற்ற குருவும் முனியும் ஓதுகின்ற
பொருள் ஒன்றே, அதுவே மறைபொருள், அது போல் எல்லா
வேதங்களின் உட்பொருள் ஒன்றே அது கருணை நெறியே" [76]

என்று ஸ்ரீ நாராயண குருவின் பாடல்வரிகள் மூலம் அறிய முடிகிறது. "மதம் எதுவானாலும் மனிதன் நல்லவனாக வாழவேண்டும்" [78] என்கிறார்.

இராமலிங்க அடிகளார் தமது திருவருட்பாவில்,

"புல்லொழுக்கம் எல்லாம் புணரிடைப் போய் ஒழிக
நல்லொழுக்கம் ஒன்றே நலம் பெறுக"[78] என்கிறார்.

பாரதியாரும்,

"அறத்தினைத் தமதோர் அறிவினாற் கொண்ட
மாட்டிலே மானிடர் மாண்பு பெறலாகார்"[79] என்கிறார்.

சோரன் கிர்கேகார்ட் அறக் கோட்பாட்டைப் பற்றி கூறும் போது ஒரு வகைப் பொதுமைப் பண்பு இதற்கு உண்டு, எனக்கு பொருந்துவது அடுத்த மனிதனுக்குப் பொருந்த வேண்டும் இப்போது பொருந்துவது எப்போதும் பொருந்த வேண்டும் என்பதே அந்தப் பொதுமைப் பண்பு என்கிறார்.[80]

ஸ்ரீ நாராயண குரு மதத்தின் அறக் கோட்பாட்டைப் பற்றித் குறிப்பிடும் போது,

"பிறர்விருப்பமே தன்விருப்பம் எனக் கொள்ளும் உள்ளம்,
பெற்றுவிடில் தன்விருப்பே பிறர்விருப்பம் ஆகும்!
பிறர்விருப்பம் நிறைவேறத் தக்க செயல் செய்தால்
பேரின்ப நெறியதனால் பெருகிவிடும் நன்மை!" [81] என்கிறார்.

"தன்னலத்தைக் கருதாமல் தான் பிறர்க்காய் வாழும்
தவமுடையோன் அருளாளன் நன்மை பல செய்வான்
தன்னலமே குறி கொண்ட அறமிலாத் தீயோன்
தான் செய்யும் வினைகளினால் விளைவதெல்லாம் தீங்கே!" [82]

"அவன் என்றும் இவனென்றும் அறையுநிலை நோக்கி
அவனியில் எவ்வுயிர்களுமே ஆன்மாவின் ரூபம்!
அவன், அவன் தன் ஆன்மாவின் சுகமதனை வேண்டி
அயலார்க்கு நன்மைகளைப் புரிந்திடுதல் வேண்டும்!" [83] என்கிறார்.

"தனக்கினிதாய்த் தோன்றுவது மற்றவர்க்குத் துன்பம்
தருமெனில் அச்செயலைத் தவிர்த்திடுக; மற்றோர்
தனக்கின்னல் செயமுனை வோர் ஆன்மாவின் பகைவர்
தழல் நரகப் படுகுழியில் வீழ்ந்திடுவோர் அன்னார்!" [84] என்கிறார்.

ஸ்ரீ நாராயண குருவின் இத்தகைய கருத்து சமுதாயத்தில் மற்றொருவர் நலமாக இருந்தால் தான் நாம் நலமாக வாழமுடியும். மற்றொருவர் துன்பப்படும் போது சமுதாயம் ஆரோக்கியம் அற்றதாக இருக்கும். நாம் நலமாக வாழ வேண்டும் என்றால் மற்றொருவர்களும் நலமாக இருந்தால் தான் முடியும். இதுவே மதத்தின் அறம் என்கிறார்.

மனிதன் தான் விரும்பிய மதத்தைப் பின்பற்றலாம் என்று ஸ்ரீ நாராயண குரு குறிப்பிடுகிறார். அவர் கருத்துப்படி மனிதனுக்கு மதச் சுதந்திரம் வேண்டும். அவன் விரும்பும் மதத்தை அவன் பின்பற்ற முழுச் சுதந்திரம் அளிக்க வேண்டும். மத மாற்றம் எதற்காக என்பதை ஆய்வு செய்து நல்லது எனத்தென்பட்டால் அவன் மதம்மாறலாம் சுயநலமாக சிந்திக்க வேண்டிய மனிதன் பல நேரங்களில் குழப்பங்களுக்கு முதலிடம் கொடுக்கிறான். சிந்தனையும், செயல்பாடுகளும் பலருக்கு நல்ல பாதையை அமைத்துக் கொடுக்க வேண்டுமே தவிர, தீய வழிகளில் ஒரு போதும் அழைத்து செல்லக்கூடாது என்கிறார்.[85]

மேலும் ஸ்ரீ நாராயண குரு தர்மத்தைப் பற்றி கூறும் போது தர்மம் எங்கும் வியாபித்திருக்கிறது. நாம் காணுகின்ற பிரபஞ்சமானது தர்மத்திலிருந்து தோன்றி, தர்ம வழியில் நின்று தர்மத்தில் கலந்து விடுகிறது. இதனால் தர்மம் வியாபித்து விடுகிறது நாம் காணும் இந்த பிரபஞ்சத்தின் சாரம், அசாரம் (அசைபவை, அசைவற்றவை) என்ற இரண்டு இனங்கள் உண்டு. சாரம் என்ற பாகத்தில் உள்ள மனித, மிருக வர்க்கங்களில் மனிதன் பகுத்தறியும் தன்மை பெற்று முதன்மையாக விளங்குகிறான். என்று மனிதனின் அறங்களாக ஸ்ரீ நாராயண குரு கூறுகிறார்.

## 4.7. ஒரு கடவுள்

ஸ்ரீ நாராயண குருவைப் பொருத்தவரை கடவுள் ஒருவரே ஆவார்.[86] "ஸ்ரீ நாராயண தர்மத்தில்"[87] விசித்திரமான இந்த உலகைப் படைத்த ஆண்டவன், எல்லா சக்திகளையும் கொண்டவரும், எல்லாம் அறிந்தவருமான சர்வேசுவரன் ஆவார். அவர் ஒருவரே என்று கூறப்படுகிறது. சத்தியத்தையே நாடி, தேடி சிந்தித்த மகரிஷிகள் மகா வேத வாக்கியங்களுக்கு மட்டுமே பொருள் உண்டு என்று அறிந்து கொள்ளுங்கள். அந்தப் பொருள் ஒன்றே என்பதை தவிர அது பல்வேறானது என்று கூறப்படுமானால் அந்த வார்த்தை அறியாமையால் ஏற்படுவது என்று தீர்மானிக்கலாம். ஆகையால் எல்லா மதங்களும் ஏற்றுக் கொண்ட, முக்கியத்துவம் கொண்ட பொருள் தெய்வம் ஒன்றே என்பதை அறிவுறுத்துவதுதான்.

ஒவ்வொரு மதத்தைச் சார்ந்தவரும் தெய்வம் ஒன்றே என்று எண்ணுவதால், எல்லோருக்கும் பொதுவான கடவுள் ஒன்றே என்பது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. தெய்வம் பல உண்டு என்று எந்த மதமும் கூறவில்லை என்கிறார்.

தெய்வம் ஒன்று என்பதை சித்தர்களில் ஒருவரான சிவவாக்கியர் கூறுகிறார்,

"செங்கண்மாலும் ஈசனும் சிறந்திருந்த தெம்முன்னே
தங்கம் ஒன்று ரூபம் வேறு" [88]என்கிறார்.

“எங்கள் தேவர் உங்கள் தேவர் என்றிரண்டு தேவரோ
அங்கும் இங்குமாய் இரண்டு தேவர் இருப்பரோ
அங்கும் இங்கும் ஆகிநின்ற ஆதிமூர்த்தி ஒன்றலோ
வங்கவாரம் சொன்னபேர்கள் வாய் புழுத்து மாள்வாரே” [89] என்கிறார்.

“எங்கள் தெய்வம் உங்கள் தெய்வம் என்றிரண்டு பேதமோ
உங்கள் பேதம் அன்றியே உண்மை இரண்டு இல்லையே” [90] என்கிறார்.

சீக்கிய மதமும் ஒரு கடவுள் கருத்தையே முன்மொழிகிறது,

“ஒன்றாம் கடவுள், உலகிடைத் தோன்றிய
மானிடரெல்லாம் சோதரர்; மானிடர்
சமத்துவம் உடையார், சுகந்திரஞ் சார்ந்தவர்
சீடர்காள்! குலத்திலும் செயலினும் அனைத்திலும்
இக்கணம் தொட்டு நீர்யாவிரும் ஒன்றே
பிரிவுகள் துடைப்பீர்! பிரிதலே சாதல்
ஆரியர் சாதியுள் ஆயிரம் சாதி
வகுப்பவர் வகுத்து மாய்க, நீர் அனைவரும்
தருமம், கடவுள், சத்தியம், சுகந்திரம்
என்பவை போன்ற எழுந்திடும் வீரச்
சாதியொன்றனையே சார்ந்தோராவீர்” [91]

பாரதியாரும் தெய்வம் ஒன்றை என்பதை முன்மொழிகிறார்,

“தெய்வம் பலபல சொல்லிப் – பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்
உய்வ தனத்திலு மொன்றாய் – எங்கும்

ஓர் பொருளானது தெய்வம்
தீயினைக் கும்பிடும் பார்ப்பார் – நித்தம்
திக்கை வணங்குத் துருக்கர்
கோயிற் சிலுவையின் முன்னே – நின்று
கும்பிடும் யேசு மதத்தார்
யாரும் பணிந்திடும் தெய்வம் – பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வ மொன்று – இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்"[92] என்கிறார்.

மேலும் பாரதியார் அறிவு ஒன்றே தெய்வம் என்கிறார்,

"ஆயிரந் தெய்வங்களுன்டென்று தேடி
அலையு மறிவிலிகள் – பல்
லாயிரம் வேத மறிவொன்றே தெய்வமுன்
டாமெனல் கேளீரோ?
மாடனை காடனை வேடனைப் போற்றி
மயக்கு மறிவிலிகாள் – எத
னூடுநின் றோங்கு மறிவொன்றே தெய்வமென்
றோதி அறியரோ?"[93] என்கிறார்.

மேற்கண்ட பாரதியின் பாடல் வரிகளும் தெய்வம் ஒன்றே என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

இராமலிங்க அடிகள் திருவருட்பா வரிகளும் தெய்வம் ஒன்றே என்கிறது,

"ஒன்றே சிவம் என்றணர்ந்திவ் வுலகமெலாம்
ஒன்றே ஒருமையுற்று நுண்ணியே – மன்றே
நடம்புரியும் பாத நளினமலர்க் குள்ளம்
இடம்புரிக வாழ்க இசைந்து" [94] என்கிறார்.

ஒன்றே கடவுள் என்ற கருத்து அதன் சமய அர்த்தத்தைத் தாண்டிய சமூக உள்ளடக்கம் கொண்டது என்கிறார் பேராசிரியர் நிஹாமி.[95]

ஸ்ரீ நாராயண குருவின் "தெய்வசதகம்"[96] பாடல் வரிகள் கடவுள் ஒன்றே என்கிறது,

கடவுளே! பேணிக் காப்பாய்
கைவிடா தெம்மை இங்கே!
படகோட்டி நீ, உன் பாதம்
பவக் கடல் கடக்கும் தோணி!

எண்ணிடும் பொருள் ஒவ்வொன்றும்
இறுதியில் ஒடுங்கும் வேளை
மண்ணிலே நிலைக்கும் என்றன்
மனமொன்றே வேண்டும் உன்னுள்
அன்னமோ டாடை நல்கி
அன்புடன் பேணி எம்மை
உன்னத மாக்கம் நீயே
உயிர்தரும் வேந்தன் அன்றோ

ஆழியும் அலையும் காற்றும்

ஆழமும் போல எம்மைச்
சூழ்ந்திடும் மாயை நீக்கச்
சுடரொளி பொலியச் செய்வாய்

படைப்பவன் நீயே மற்றும்
படைத்திடும் பொருளும் நீயே
படைத்திடும் தொழிலும் நீயே
படைத்திடும் நெறியும் நீயே

மாயை நீ, மாயாவியும் நீ
மாயாவி நோதன் நீயே
மாயையை நீக்கி மாறா
மலர்பதம் தருவாய் நீயே

உண்மையும் நீயே, ஞான
ஒளியும் நீ, உலகை நீயே
மண்ணுக நிகழ்ச்சி, ஓதும்
மறைமொழி, அனைத்தும் நீயே

அகம்புறம் ஒளிரும் நின்றன்
அருட்சுடர் மகிமை யாலே
புகழ்ந்துணைப் பாடு கின்றோம்
பூரணா போற்றி போற்றி

தீனரை காப்பாய் வெல்க

தேவனே வெல்க, வெல்க

ஆனந்த வடிவே வெல்க

அருட் பெருங்கடலே வெல்க

ஆழ்ந்தநின் கருணை என்னும்

ஆழியில் நாங்கள் மூழ்கி

ஆழ்ந்திட வேண்டும் என்றும்

வாழ்ந்திட வேண்டும் நன்றே என்கிறார்.

ஸ்ரீ நாராயாண குருவின் பாடல் வரிகள் தெய்வம் ஒன்றே என்பதையும், படைப்பவன் அவனே, படைக்கும் பொருளும் அவனே, படைத்திடும் தொழிலும் அவனேஎன்கிறார். மேற்குறித்த ஸ்ரீ நாராயண குருவின் பாடல்கள் மூலம் படைப்பவன், படைக்கும் பொருளும் ஒன்று என்பதையும், தெய்வம் ஒன்று என்பதையும் அறியமுடிகிறது.

## குறிப்புகள்

1. ஸ்ரீ நாராயண குரு, "ஸ்ரீநாராயண தர்மம்", ப. 28-29.

2. "திருவருட்பா", பா. 5566.

3. ந.முத்துமோகன்,"மார்க்சியக் கட்டுரைகள்", ப. 330.

4. அம்பேத்கர்பிரியன்,"ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 130.

5. மேலது ., பா. 169.

6. மேலது ., பா. 162-163.

7. மேலது ., பா. 162.

8. ந.முத்துமோகன்,"மார்க்சியக் கட்டுரைகள்", ப. 197.

9. கே.வரதராஜன்,"இந்திய தத்துவ தரிசனம்", ப.14.

10. மேலது ., பா. 14.

11. அம்பேத்கர்பிரியன்,"ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 97.

12. மேலது ., பா. 149.

13. "Jathi Mimamsa", Narayana Guru the Social Philosopher, p.52.

14. குரு முனிநாராயணன் பிரசாத்,"ஸ்ரீ நாராயண குருவின்,ஆத்மோபதேச சதகம்", ப. 24.

15. கே.வரதராஜன்,"இந்திய தத்துவ தரிசனம்", ப. 77.

16. மேலது ., பா. 71.

17. ந.முத்துமோகன்,"மார்க்சியக் கட்டுரைகள்", ப. 40.

18. "ஆத்மோபதேச சதகம்", பா. 36.

19. மேலது ., பா. 39 - 42.

20. ந.முத்துமோகன்,“ஐரோப்பிய தத்துவங்கள்”, ப. 22.

21. “ஆத்மோபதேச சதகம்”, பா. 32.

22. மேலது ., பா. 33.

23. V.I.Lenin,“Philosophical note Books Politisthat”, p.103-104.

24. “ஆத்மோபதேச சதகம்”, பா. 3.

25. மேலது ., பா. 2.

26. சரவணானந்த சுவாமி,“அருட்பெரும் ஜோதி அகவல் உரை”, ப. 1.

27. “திருவருட்பா”, பா. 5697.

28. மேலது ., பா. 5699.

29. மேலது ., பா. 3269.

30. “ஆத்மோபதேச சதகம்”, பா. 28.

31. மேலது ., பா. 59.

32. மேலது ., பா. 60.

33. மேலது ., பா. 61.

34. மேலது ., பா. 65.

35. ந.முத்துமோகன்,“மார்க்சியக் கட்டுரைகள்”, ப. 74.

36. குரு முனிநாராயண பிரசாத்,“ஆத்மோபதேச சதகம் (விளக்கஉரை)”, ப. 16.

37. K.H.Nizami,“Aspects of Politics and Religion in 13$^{th}$ Century India’’, p. 2.

38. நம்மாழ்வார்“திருவாய்மொழி”, முன்னூல், பா. 8:5:10.

39. “திருவருட்பா”, பா. 4615.

40. ஊரன் அடிகள்,“வள்ளலாரும் பாரதியாரும்”, ப. 54.

41. மேலது ., பா. 39.

42. பாரதியார்,“சங்கு”, பா. 1:2.

43. ஊரன் அடிகள்,“வள்ளலாரும் பாரதியாரும்”, ப. 71.

44. “ஆத்மோபதேச சதகம்”, பா. 76.

45. மேலது ., பா. 65.

46. ந.முத்துமோகன்,“ஐரோப்பிய தத்துவங்கள்”, ப. 70–71.

47. ந.முத்துமோகன்,“மார்க்சியக் கட்டுரைகள்“, ப. 64.

48. “ஆத்மோபதேச சதகம்”, பா. 67.

49. மேலது ., பா. 66.

50. “திருவருட்பா”, பா. 4913.

51. ந.முத்துமோகன்,“மார்க்சியக் கட்டுரைகள்”, ப. 98.

52. “ஆத்மோபதேச சதகம்”, பா. 10.

53. மேலது ., பா. 11.

54. ஸ்ரீநாராயணகுரு,“ஸ்ரீநாராயண தர்மம்”, ப. 29–30.

55. ந.முத்துமோகன்,“மார்க்சியக் கட்டுரைகள்”, ப. 331–336.

56. “ஆத்மோபதேச சதகம்”, பா. 44.

57. மேலது ., பா. 45 – 46.

58. மேலது ., பா. 47.

59. மேலது ., பா. 48.

60. ந.முத்துமோகன்,“மார்க்சியக் கட்டுரைகள்”, ப. 281.

61. மேலது ., பா. 395.

62. குருமுனிநாராயண பிரசாத்,“ஆத்மோபதேச சதகம் (விளக்கஉரை)”, ப. 151.

63. “ஆத்மபோதச சதகம்”, பா. 49.

64. ந.முத்துமோகன்,“ஐரோப்பிய தத்துவங்கள்”, ப. 76.

65. மேலது ., பா. 76.

66. மேலது ., பா. 77–80.

67. “திருவருட்பா”, உரைநடைப்பகுதி, ப. 16.

68. ஊரன் அடிகள்,“வள்ளலாரும் பாரதியாரும்”, ப. 45.

69. அம்பேத்கர்பிரியன்,“ஸ்ரீநாராயணகுருவின் வாழ்க்கை வரலாறு”, ப. 142.

70. “Philosophy of Sree Narayana Guru”, S.Omana, p.23.

71. மேலது ., பா. 24.

72. “திருவருட்பா”, பா. 3406.

73. ஆண்டாள், ‘திருப்பாவை”, பா. 28.

74. தொண்டரடிப் பொடியாழ்வார்“திருமாலை – முன்னூல்”, , பா. 42.

75. ந.முத்துமோகன்,“மார்க்சியக் கட்டுரைகள்”, ப. 763.

76. ஸ்ரீ நாராயண குரு,“அனுகம்பா சதகம்”, பா. 11.

77. அம்பேத்கர்பிரியன்,“ஸ்ரீ நாராயண குருவின் வாழ்க்கை வரலாறு”, ப. 186.

78. “திருவருட்பா”, பா. 5619.

79. பூம்புகார் பிரசுரம்,“பாரதியார் கவிதைகள்”, ப. 73.

80. ந.முத்துமோகன்,“மார்க்சியக் கட்டுரைகள்”, ப. 118.

81. “ஆத்மோதேச சதகம்”, பா. 22.

82. மேலது ., பா. 23.

83. மேலது ., பா. 24.

84. மேலது ., பா. 25.

85. அம்பேத்கார்பிரியன்,“ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு”, ப. 150.

86. ஸ்ரீநாராயணகுரு,“ஸ்ரீநாராயணதர்மம்”, ப. 27.

87. மேலது ., ப. 31.

88. சிவவாக்கியர்,“சிவஞான போதம்”, பா. 29.

89. மேலது ., பா. 131.

90. மேலது ., பா. 222.

91. Sagat Singh,“The Sikhs is History”, p.71.

92. ஊரன் அடிகள், “வள்ளலாரும் பாரதியாரும்”, ப45

93. பாரதியார்,“அறிவே தெய்வம்”, பா. 1:2.

94. “திருவருட்பா”, பா. 5615.

95. K.H.Nizami, “Aspects of Politics and Religion is 13th Century India”, p.2.

96. ஸ்ரீநாராயணகுரு,“தெய்வசதகம்”, ஸ்ரீ நாராயணகுரு வாழ்க்கை வரலாறு,ப. 184-185.